மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 4

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

## பிப்ரவரி 2011

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2011 பிப்ரவரி**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**உன் சந்ததியின்மேல்**
**என் ஆவியையும்,**
**உன் சந்தானத்தின்மேல்**
**என் ஆசீர்வாதத்தையும்**
**ஊற்றுவேன்.**

ஏசாயா 44 : 3

**ஜெப வீடு பிரதிஷ்டை**

இடம் :**வல்லம்**
நாள் : 19.01.2011 10 A.M.
இடம் :**மொன்னவேடு**
நாள் : 19.01.2011 4 P.M.

நன்றி
பாஸ்டர் ஜோசப் ஜெபமணி
Yishun Evangelical Church

**Bishop Consecration**
நாள் : 03 - 04 Feb. 2011



வல்லம் ஜெபவீடு

**ஜெபியுங்கள் ! துதியுங்கள் !**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

**பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்.** சகரியா 4 : 6.



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்





**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி

*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!*

*இந்த மாதத்திலே 100 - கிராம ஊழிய பத்திரிகை வாசகர்கள் யாவரையும் ஞானத்தின் ஆவியினால் கர்த்தர் நிரப்பும்படியாக வாழ்த்துகிறோம். ஜெபிக்கிறோம்!*

"***முந்தின சீரைப் பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாகச் செய்வேன்***" *என புத்தாண்டில் வாக்களித்த தேவன் தம்முடைய ஞானத்தின் ஆவியினால் உங்களை நிரப்பி உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!*

*2010ம் ஆண்டு கர்த்தர் அற்புதமாக நடத்தின ஊழிய அறிக்கையை பக்கம் 12-14 பக்கங்களில் படித்து தேவனை துதியுங்கள். ஜெபித்த, கொடுத்த, உழைத்த யாவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.*

*குறிப்பாக* The Ambassador School of Learning *தரிசனமானது படிப்படியாக வளர்ந்து நிறைவேற ஜெபியுங்கள்.*

*100 - கிராம ஊழியம் ஒவ்வொரு மாதமும் இரண்டு இடத்திலாவது நடைபெற வேண்டும் என ஜெபியுங்கள்.*

*ஒவ்வொரு குடும்பமும் கர்த்தருக்காக ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்ற வாஞ்சை பெருகும்படியாக ஜெபியுங்கள்.*

*கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!*

**கிறிஸ்துவின் பணியில்,**

P. T. கிறிஸ்டோபர் & ஸ்டீபன் கிறிஸ்டோபர்.

# உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். ஏசாயா 44 :3

[ *வாக்குத்தத்த செய்தி :* சகோ. P.T. கிறிஸ்டோபர் ]

## இயேசுவே ஞானத்தின் ஆவியைத் தாரும்!

## பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும். சகரியா 4 : 6.

எங்களுக்கு இருக்கும் பண பெலத்தினாலே, ஆள் பெலத்தினாலே, அறிவு பெலத்தினாலே, அரசியல் பெலத்தினாலே இன்னின்னதை சாதிக்க முடியும் என சிந்தித்துக் கொண்டிருக்கும் சகோதரனே, சகோதரியே!

கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது:

**பலத்தினாலும் அல்ல,**
**பராக்கிரமத்தினாலும் அல்ல,**
**என்னுடைய ஆவியினாலேயே ஆகும்.**

இந்த மாதத்திலே அடிக்கடி சொல்ல வேண்டிய ஒரு வாக்கியமானது **"தேவ ஆவியினாலே ஆகும்".**

இந்த வசனமானது, உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் சந்ததிக்கும் தேவையாக உள்ளது.

கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது:

**உன் சந்ததியின்மேல்**
**என் ஆவியையும்**
**உன் சந்தானத்தின்மேல்**
**என் ஆசீர்வாதத்தையும்**
**ஊற்றுவேன்.**

எதை எடுத்தாலும் என்னுடைய பலம் அல்ல, பராக்கிரமம் அல்ல, **தேவ ஆவியினாலே ஆகும்** என விசுவாசித்து அறிக்கை செய்யுங்கள். அப்பொழுது தேவன் உங்கள் சந்ததியின்மேல் தமது ஆவியையும், உங்கள் பிள்ளைகள் மேல் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவார்.

**பவுல் கூறுகிறார் : 2கொரி.3:5**
எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது.

ஆம்! சகோதரனே, சகோதரியே உங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது.

**இயேசு கூறுகிறார் : மத்தேயு 10 : 30**
உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே! எப்பொழுதும் தேவனுடைய வார்த்தையையே விசுவாசியுங்கள்.

**பலத்தினாலும் அல்ல,**
**பராக்கிரமத்தினாலும் அல்ல,**
**என்னுடைய ஆவியினாலேயே ஆகும்.**

விசேஷமாக இந்த மாதத்தில் நீங்கள் தேவ ஆவியினாலே நடத்தப்பட வேண்டும்.

உங்கள் குடும்பம் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்பட வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்பட வேண்டும்.

உங்கள் சபை தேவனுடைய ஆவியினாலே நடத்தப்பட வேண்டும்.

உங்கள் அலுவலகம் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்பட வேண்டும்.

உங்கள் தொழில் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்பட வேண்டும். சகலமும் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்பட வேண்டும் என வாஞ்சியுங்கள். **"தேவ ஆவியினாலே நடத்தப்பட வேண்டும்"** என ஒப்புக் கொடுங்கள்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் **மூன்று விதமான ஆவிகள் போராடுகின்றன.**

**1. தேவ ஆவி**

**2. மனுஷ ஆவி**

**3. அசுத்த ஆவி**

நாம் தேவ ஆவியினால் வழிநடத்தப்பட ஒப்புக் கொடுக்க வேண்டும்.

**பக்தன் பாடுகிறார் :**

***எங்கு செல்ல வேண்டும்,***
***என்ன சொல்ல வேண்டும்***
***வழிநடத்தும் ஆவியானவரே***
***உம் விருப்பம் இல்லாத இடங்களுக்குச் செல்லாமல்***
***தடுத்து நிறுத்தும் ஆவியானவரே***
***ஆவியானவரே ஆவியானவரே***
***பரிசுத்த ஆவியானவரே***
***எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே***
***இந்நாளில் உம் சித்தம்போல் நடத்திச் செல்லுமையா***

இந்தப் பாடலை அனுதினமும் பாடுங்கள். பாடிக்கொண்டேயிருங்கள்.

தேவஆவியானவரின் வழிநடத்துதல் வேண்டும் என்ற உணர்வு உங்களுக்குள்ளே ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். **ரோமர் 8 : 14** "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்".

நீங்கள் தேவனுடைய புத்திரராய் மாறும் போது உங்கள் சந்ததியிலும் தேவனுடைய ஆவி ஊற்றப்படுகிறது. நீங்கள் தேவனுடைய புத்திரராய் மாறும் போது உங்கள் சந்ததியிலும் தேவனுடைய ஆவி ஊற்றப்படுகிறது.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே!

உங்கள் சந்ததியின்மேல் தேவனுடைய ஆவியும், உங்கள் பிள்ளைகள்மேல் ஆசீர்வாதமும் வர, பெற்றோர்களாகிய நீங்கள் முதலாவது தேவனுடைய ஆவியினாலே வழிநடத்தப்பட வேண்டும். சபை விசுவாசிகள் தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்பட, ஆசீர்வாதத்தைப் பெற "போதகரே" நீங்கள் முதலாவது தேவ ஆவியினாலே வழிநடத்தப்பட வேண்டும்.

அதிகாலையில் தேவனுடைய சமுகத்தில் தேவனைத் துதித்து, பாவ அறிக்கை செய்து, இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியின் நடத்துதலுக்கு ஒப்புக் கொடுங்கள்.

இந்த மாதத்தின் முக்கிய செய்தியானது நீங்கள் **"தேவ ஆவியினாலே"** வழிநடத்தப்பட வேண்டும்.

ஆவி என்று சொல்லும்போது, ஆவியானவர், தேவஆவி, கர்த்தரின் ஆவி, பரிசுத்த ஆவி என பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் நாம் காணலாம். அந்த ஆவியானது பலவித கோணங்களில் மனுஷருக்குள் செயல்படுவதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஒரு சத்தியத்தை மட்டும் தியானிப்போம்.

## ஞானத்தின் ஆவி

**யாத். 28 : 3**

ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யத்தக்கதாக அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அவனுக்கு வஸ்திரங்களை உண்டாக்கும்பொருட்டு, நான் **ஞானத்தின் ஆவியால் நிரப்பின** விவேகமான இருதயமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக.

**உபா, 34 : 9**

மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்.

ஆம்! பிரியமானவர்களே, தேவ ஆவியினால் நடத்தப்பட நாம் ஒப்புக் கொடுக்கும்போது தேவன் **"ஞானத்தின் ஆவியினால்"** நிரப்புகிறார்.

அதுமாத்திரமல்ல, ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்பட்ட மனிதர்களை நமக்குக் கொடுக்கிறார். உங்கள் ஊழியத்திற்கும், தொழிலுக்கும் தேவை **"ஞானமுள்ள ஆவியை பெற்ற மனிதர்கள்"**.

நீதிமொழிகள் 1 :7 கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.

"உன் சந்ததியின்மேல் என் ஆவியை ஊற்றுவேன்" என தேவன் வாக்களிக்கிறார். அதற்கு முன்பு உங்கள் மேல் தேவஆவியை ஊற்ற விரும்புகிறார். அப்படியே தேவஆவி உங்களுக்குள் ஊற்றப்பட்டு, நீங்கள் தேவஆவியினால வழிநடத்தப்படும்போது கிடைக்கும் முதல் ஆசீர்வாதம் "**ஞானத்தின் ஆவி**".

என் அன்பு தேவஊழியரே, விசுவாசிகளே! உங்களுக்கு முதல் தேவை "**ஞானத்தின் ஆவி**".

2011ம் ஆண்டு உங்கள் பிள்ளைகளுக்கு தேவை "**ஞானத்தின் ஆவி**".

உங்கள் சபை மூப்பருக்கு தேவை "**ஞானத்தின் ஆவி**".

உங்கள் உடன் ஊழியருக்கு தேவை "**ஞானத்தின் ஆவி**".

உங்கள் சபை விசுவாசிகளுக்கு தேவை "**ஞானத்தின் ஆவி**".

**பக்தன் பாடுகிறார் :**

***பெலடைய நிரப்பிடுமே***
***பெலத்தின் ஆவியை***
***கனமடைய ஊற்றிடுமே***
***ஞானத்தின் ஆவியே***
***அசைவாடும் ஆவியே***
***தூய்மையின் ஆவியே***

**நீதி. 2 : 6** கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.

**பதவிகள், உயர்வுகள் உன்னைத் தேடி வரும்.**

நீங்கள் தேவஆவியினால் நடத்தப்படும் போது, புதிய பதவிகள், பதவி உயர்வுகள், உங்களைத் தேடி வரும்.

## *தானியேலின் துதி!*

**தானியேல் 2 : 23** என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக் கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன் என்றான்.

## *தானியேலுக்கு தேவன் கொடுத்த உயர்வு*

**தானியேல் 2 :** 47 , 48 ராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான்.

பின்பு ராஜா தானியேலைப் பெரியவனாக்கி, அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக் கொடுத்து, அவனை பாபிலோன் மாகாணம் முழுவதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான்.

தேவனுடைய வாக்குத்தத்த செய்தியை மிகுந்த ஆவலுடன், எதிர்பார்ப்புடன், விசுவாசத்துடன் வாசித்துக் கொண்டிருக்கும் சகோதரியே, சகோதரனே, கர்த்தர் கிருபையாக உங்களுக்கு ஒரு உயர்வைக் கட்டளையிடப் போகிறார்.

தானியேலின் தேவன் உங்கள் தேவன்.

இந்த 2011ம் ஆண்டிலே தேவ ஆவியானவர் உங்களை உயர்ந்த ஸ்தானத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார். தேவஆவியினால் நடத்தப்பட உங்களை ஒப்புக் கொடுப்பீர்களா ?

**யார் ஞானவான் ? நீதி . 11 : 30**

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்.

**தானியேல் 12 : 3** ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.

மிக முக்கியமாக நீங்கள் ஞானவான்கள் என்பதின் பிரதான அடையாளம் "**ஆத்தும ஆதாயம்**" செய்வதாகும்.

கன்னியின் வயிற்றில் உற்பவித்து, நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்து, சிலுவையில் அறையப்பட்டு, இரத்தம் சிந்தி, மரித்து அடக்கப்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்து, மீண்டும் வரப் போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை இன்னும் அறியாத மக்களுக்கு அறிவித்து "**ஆத்தும ஆதாயம்**" செய்வீர்களானால் நீங்கள் ஞானவான்கள். தேவ ஆவியினால் நடத்தப்படுகிறீர்கள் என்பதற்கு இது ஒரு உயர்ந்த அடையாளமாகும்.

தேவஞான மானது, உலகத்தின் பதவியில் ஒரு உயர்வை தருகிறது. அதுமட்டுமா ? "**ஆத்தும ஆதாயம்**" செய்ய உங்களை ஊக்குவிக்கிறது. ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணினால் நீங்கள் ஒரு ஞானவான். **ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போல இருப்பார்கள்.** ஞானமானது இம்மையில் பதவி உயர்வை அளிக்கிறது. மறுமையில் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போலப் பிரகாசிக்கப் பண்ணுகிறது.

**ஞானம் எங்கேயிருந்து வருகிறது ?**

கர்த்தருக்குப் பயப்படும்போது ஞானம் வருகிறது.

**கர்த்தருக்குப் பயப்படுதல் எப்போது வருகிறது ?**

கர்த்தருடைய ஆவியினால் நடத்தப்படும் போது வருகிறது.

அப்பொழுது **கர்த்தர் கொடுக்கும் வாக்குத்தத்தம் என்ன ?**

**உன் சந்ததியின்மேல்**
**என் ஆவியையும்**
**உன் சந்தானத்தின்மேல்**
**என் ஆசீர்வாதத்தையும்**
**ஊற்றுவேன்.**

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**என் சந்ததியின்மேல்**
**தன் ஆவியையும்**
**என் சந்தானத்தின்மேல்**
**தன் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவார்.**

மீண்டும் மீண்டுமாக அறிக்கை செய்யுங்கள்.

**உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்.**

**ஆமென் !**


**மீண்டுமாக அன்புடன் ஞாபகப்படுத்துகிறோம்**

***100 - கிராம ஊழியம் மாதாந்திரப் பத்திரிகை ஆண்டு சந்தா***

**இந்தியா – ரூ. 25**

**வெளிநாடு – ரூ. 250**

**TVGM Publication – என்ற பெயரில் டிராப்ட் அல்லது செக் அல்லது மணியார்டர் மூலம் உங்கள் சந்தாவை அனுப்பி புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

**தொடர்பு முகவரி: பக்கம் 16**

# நாகப்பட்டிணம் – குத்தாலம் யூனியன்
# 2011 டிசம்பர் மாத 100 – கிராம ஊழிய அறிக்கை

**Thanks :** ELC - Neck - The Light House Ministries, Kuwait.

ஊழியம் நடைபெற்ற தேதி : **13 . 12. 2010 முதல் 17. 12. 2010**

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை பொறுப்பெடுத்து உதவி செய்தவர் : **பாஸ்டர் எபிதாஸ் ,**

**நல்ல மேய்ப்பன் சபை, தேரிழந்துார்.**

ஊழியம் செய்த கிராம ஊழியர்களின் எண்ணிக்கை : **58 பேர்**

முதல் நாள் தேவசெய்தி கொடுத்தவர் : **பாஸ்டர் காபிரியேல்,**

பிரிக்கப்பட்ட மொத்த குழுக்கள் : **13 குழுக்கள்**

வழங்கப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள் : **12,633** யோவான் சுவிசேஷங்கள்

**இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள்** : 15,000

மற்ற கைப்பிரதிகள் : 5000

சிலுவைக்கொடிகள் : 10,000

புறமதநண்பர்களின் விலாசங்கள் : 215

**சகலவற்றையும் கவனித்து நடத்திய சகோ. பன்னீர்செல்வத்திற்கு நன்றி.**



கிராம ஊழியர்கள் : **58 பேர்**



**பாஸ்டர் எபிதாஸ் குடும்பம்**





கிராம ஊழியர்கள் யாவருக்கும் கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் வழங்குதல்

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 - சகோதரிகள் : மரியம்மாள், எஸ்தர் பேபி, கிரேஸ் பத்மா, அபியேல் அந்தோணியம்மாள், லூர்துமேரி.**

நாங்கள் கிராமங்களில் வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷம் கொடுத்து இயேசுவே ஆண்டவர் என்று அறிவித்த போது, ஒருவர் யோவான் புத்தகத்தை வாங்கிக் கொண்டு **இயேசு அற்புதம் செய்பவர்** என்று சொன்னார். பிசாசு பிடித்தவர்களுக்காக ஜெபித்தபோது, **இயேசு விடுதலைக் கொடுத்தார்**. மொத்தம் 1020 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 - சகோதரிகள் : லீதியாள், மேரி செல்லாபாய், தேவகிருபை, மணியம்மாள், சலோமி சம்மனசு**

நாங்கள் 13 கிராமங்களில் ஊழியம் செய்தோம். யாவரும் சுவிசேஷப் புத்தகங்களை சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். முகமதியர்களும் சுவிசேஷப் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். சத்தியத்தை வாஞ்சை யோடு கேட்டார்கள். மொத்தம் 1033 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 - சகோதரிகள் : அன்னாள், ரூத் கலாவாணி, ரெபேக்கா, கனி, கலைச் செல்வி.**

நாங்கள் 10 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். நாங்கள் தங்கியிருந்த இடத்தில் பாடித் துதித்த போது அந்த தெருவிலுள்ள அநேகர் கூடி வந்து எங்களை கவனித்து கொண்டிருந் தார்கள். அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லி ஜெபித்தோம். யாவரும் சந்தோஷமாக கேட்டார்கள். மொத்தம் இந்தப் பகுதிகளில் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 - சகோதரிகள் : அமிர்தம், எஸ்தர் கனகாம்புஜம், ஷீலா, அந்தோணிமேரி, ரோணிக்கம்.**

குத்தாலம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். பாமர மக்கள் அதிகம் உள்ள இந்த கிராமங்களில் மக்கள் ஆர்வமாக சுவிசேஷத்தைக் கேட்டு, தங்களுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 - சகோதரிகள் : கஸ்தூரி, ஜோதிமணி, கிருபா பழனியம்மாள், மரியாள் தாவீது.**

நாங்கள் 17 கிராமங்களுக்கும் மேலாக சென்று சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து நற்செய்தியை அறிவிக்க கர்த்தர் கிருபை செய்தார். பிசாசின் பிடியில் இருந்தவர்களுக்காக ஜெபித்த போது கர்த்தர் விடுதலைக் கொடுத்தார். அதிக தூரம் நடந்து சென்று ஊழியம் செய்தோம். மொத்தம் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 - சகோதரர்கள் : மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், நோவா, மகாராஜன்.**

கோனேரிராஜபுரம் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சென்று ஊழியம் செய்தோம். சிவனகரம் என்ற கிராமத்தில் ஒருவர் எங்களைப் பார்த்து நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்? என்று கேட்டு விட்டு, நாங்கள் இந்து மக்கள், நீங்கள் மாதா கோவிலில் போய் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு தூஷண வார்த்தைகளால் திட்டினார். பின்பு நாங்கள் வைகல் கிராமத்தில் போய் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 1020 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 - சகோதரர்கள் : இஸ்ரவேல், பிரேம் ஆனந்த், பாபு சாலமோன், ஆசீர்பாண்டி.**

முஷ்டக்குடி, வடமட்டம், கீழவயலூர், மல்லபுரம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து நற்செய்தியை அறிவித்தோம். வியாதியஸ்தர்கள், பிசாசு பிடித்தவர்களுக்காக ஜெபித்தோம். கர்த்தர் விடுதலைக் கொடுத்தார். பூங்குடி கிராமத்தில் ஒரு பெண் உங்கள் புத்தகமும், கைப்பிரதியும் வேண்டாம் என்றாள். சத்தியத்தை எடுத்து சொன்ன போது உணர்த்தப்பட்டு நீங்கள் எங்கள் ஊரிலிருந்தே ஒரு சபை அமைத்து ஜெபம் செய்யுங்கள், இடம் இருக்கிறது என்றாள். மொத்தம் 950 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 - சகோதரர்கள் : பால்ராஜ், சூசைமாணிக்கம், அந்தோணி, செல்வராஜ்.**

கிராமத்தில் ஒரு அம்மாவிற்காக ஜெபித்த போது இயேசு என்னை தொட்டு விட்டார் என்று ஆச்சரியத்தோடு கூறினார்கள். இந்து மக்கள் அதிகமாக உள்ள கிராமங்களில் மக்கள் சுவிசேஷத்தை விருப்பத்துடன் கேட்டார்கள். ரோமன் கத்தோலிக்க மக்கள் அவர்களுடைய கிராமத்தில் எங்களை போக விடவில்லை. ஆனாலும் கர்த்தரின் உதவியால் சுவிசேஷத்தை அறிவித்தோம். மொத்தம் 860 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 - சகோதரிகள் : வசந்தா, அன்னக்கிளி, ஜெபமணியம்மாள், கிளமெண்ட்ஸ்மேரி.**

கிராமத்தில் ஒருவருடைய வீட்டில் மாடு குட்டிப் போட்டு, அந்த குட்டி 10 நாட்களாக எழுந்து நிற்கவில்லை என்று ஜெபிக்கச் சொன்னார்கள். ஜெபித்தபோது, கர்த்தர் அற்புதம் செய்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 - சகோதரிகள் : லூாயிஸ், சாந்தி, தெபோராள், பாக்கியம்.**

கடக்கம் கிராமத்திலும் அதைச் சுற்றி யுள்ள கிராமங்களிலும் வீடுகளில் மக்களை சந்தித்து சுவிஷேப் புத்தகங்கள் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். அநேக மக்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 - சகோதரர்கள் : ஜோசப் முரளிதரன், யோசுவா, பவுல் கோபால், ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம்.**

நாங்கள் 12 கிராமங்களில் ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். அசுத்த ஆவி பிடித்த பெண்ணிற்காக ஜெபித்த போது, அசுத்த ஆவி அவளை விட்டு வெளியேறியது. இயேசுவை ஏற்றுக் கொள்வதாகவும், இனி சபைக்கு செல்வ தாகவும் சொல்லி தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12 - சகோதரர்கள் : தாஹாகனி, அலாவுதீன், எபிநேசர், தாவீது.**

தேரிழந்துார் கிராமத்தில் ஒருவன் உருட்டுக் கட்டையை எடுத்துக் கொண்டு அடிக்க வந்தான். எப்படி எங்கள் இந்து மக்களுக்கு புத்தகங்களை கொடுக்க லாம் என விரட்டினான். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 13 - சகோதரிகள் : எஸ்தர், பிச்சையம்மாள், எஸ்தர் எபிநேசர், தேவபாக்கியம், செல்லக்கனி.**

நாங்கள் சென்ற கிராமத்தில் அநேக ருக்கு இயேசுவின் அன்பை கூறியபோது சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 750 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# புதுக்கோட்டை மாவட்டம் - திருமயம் யூனியன்
# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2011 பிப்ரவரி 14** திங்கள் காலை 9 மணி முதல் **பிப்ரவரி 18** வெள்ளி இரவு 10 மணி முடிய **திருமயம் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் :2011 பிப்ரவரி 14** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2011 பிப்ரவரி 18** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2011 பிப்ரவரி 14 -18 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. **இயேசுகிறிஸ்துவின் பேழை ஜெபவீடு**
**5 / 31, ஆனந்தன் நகர், மரம் மில் அருகில்,**
**திருமயம் போஸ்ட், புதுக்கோட்டை மாவட்டம்.**
**செல்: 97156 30551**

உதவி செய்ய முன் வந்த Pr. **கைவல்யம் டேவிட்** , Pr.**ஐசக்** – நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94871 92763**

**ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர் – செல் : 94435 44628**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

## ஜெபத்தைக் கேட்டு தேவன் செய்த அற்புதங்கள் !

**1.Rev.அருள்தாஸ், திருக்கோவிலூர்.**

எங்கள் சபையில் ராஜேஸ்வரி அபிகாயில் என்ற சகோதரிக்கு பிரசவத்தில் குழந்தை இறந்து பிறந்தது. தாய்க்கு மூக்கு வழியாக இரத்தம் வந்து, பிழைப்பது அரிது என மருத்துவர் கூறி விட்டார்கள். நான் தாயை உயிரோடு தாரும் அநேக ஊழியங்களுக்கு சாட்சி எழுதுவேன் என பொருத்தனை செய்து ஜெபித்தேன். அதின்படி தேவன் தாயை காப்பாற்றி மறுபடியும் கர்ப்பந்தரிக்கும்படி செய்துள்ளார். தேவனுக்கே மகிமை.

**2.சகோதரி சுகிதா, கன்னியாகுமரி.**

என் மகன் ஒரு வாரமாக காய்ச்சல், சளியினால் கஷ்டப்பட்டான். மருத்துவ மனைக்கு சென்றும் குணமாகவில்லை. 100–கிராம ஊழிய பத்திரிகையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் சுகம் கொடுத்தார்.

**3.சகோதரி சித்ரபிரியா, தி.மலை.**

எனக்கு B.L. இறுதித் தேர்வில் இரண்டு பாடங்கள் தோல்வியடைந்துள் ளதாக ரிசல்டு வந்திருந்தது. TVGM-க்கு ஜெபிக்க கடிதம் எழுதிவிட்டு, நம்பிக்கை யோடு மறுதிருத்தம் செய்வதற்காக அனுப் பியிருந்தேன். சாட்சி எழுதுவதாகவும் பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார். மறுதிருத் தத்தில் இரண்டு பாடங்களும் பாஸ் என வந்தது. இப்பொழுது திருவண்ணா மலையில் வழக்கறிஞராக பணிபுரிகிறேன். தேவனுக்கே மகிமை.

**4. சகோதரி ஜீவகாந்தி, கோவை.**

எனது இடது காலில் முள் ஆழமாக குத்தியிருந்தது. வலி இல்லாமல் முள் வெளியே எடுத்தால் சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். கர்த்தர் வலி இல்லாமல் எடுக்க செய்தார்.

**5. சகோதரி எலிசபெத், கோவை.**

என் மகனுடைய திருமணத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். **"உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்"** என்ற வசனத்தை நீங்கள் எனக்கு கடிதத்தில் எழுதியிருந் தீர்கள். அதின்படியே கர்த்தர் அதிசயமாக திருமணத்தை நடத்தி தந்தார்.

**6. சகோதரி ரோஸி, திண்டுக்கல்.**

என் சித்தி இருவரின் திருமணத் திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியி ருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு திருமணத்தை நடத்தித் தந்தார்.

**7. சகோ.கணேசன், நெல்லை.**

என் நண்பரின் மனைவிக்கு சுக பிரசவத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதி யிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகபிரசவத்தில் ஆண்குழந்தையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

**2011 பிப்ரவரி மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : சிவகங்கை
யூனியன் : சாக்கோட்டை
நாள் : 05.02.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் ஸ்டீபன்**
**எர்மோன் சர்ச்**
**9, சர்ச் தெரு**
**அசோக் நகர் மேற்கு**
**காரைக்குடி - 630 002.**
**சிவகங்கை மாவட்டம்.**

# கன்னியாகுமரி மாவட்ட
# TVGM அறிமுகப்பணி அலுவலகம்
# 2010 ம் ஆண்டு ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2010ம் ஆண்டு ஆரம்பம் முதல் இறுதி மாதம் வரை கர்த்தருடைய கரம் மிகவும் அதிசயமாக எங்களோடிருந்து நடத்தியது. ஜனவரியில் 3 நாட்கள் உபவாச ஜெபத்துடன் ஊழியத்தைத் துவங்கினோம். பலவித போராட்டங்கள், பெலவீனங்கள் தாக்கினாலும் தேவன் எங்களைப் பெலப்படுத்தினார். பிப்ரவரி மாதத்தில் வீட்டுக் கூட்டங்கள், திறந்தவெளி கூட்டங்கள் மூலம் தேவநாமம் மகிமைப்பட்டது. மார்ச் மாதம் கன்னங்குளம் சி.எஸ்.ஐ. சபையிலும், ஏப்ரல் மாதத்தில் சரல்கோட்டை சி.எஸ்.ஐ. அறிமுகப் பணி செய்யப்பட்டது. ஏப்ரல் 14ம் தேதி தரிசன முகாம் அஞ்சுகிராமத்தில் நடத்தப்பட்டது. இதுவரை 33 ஜெபக்குழுக்கள் மாதந்தோறும் நாங்கள் அனுப்பும் ஜெபக்குறிப்புகளை வைத்து ஜெபித்து வருகிறார்கள். ஜுன் மாதம் என்னுடைய அறுவை சிகிச்சையின் நாட்களிலும் கர்த்தர் யாவரையும் விசேஷமாக பெலப்படுத்தி, எனக்கும் அற்புதசுகம் தந்தார். ஜுலை மாதம் குருந்தன்கோடு 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. பின்தொடர்பணி செய்யப்பட்டு வருகிறது. ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் இரண்டு சகோதரிகளை கர்த்தர் ஊழியத்தில் இணைத்தார்.

நாகர்கோவில் அலுவலகம் மூலம் சுவிசேஷ ஊழியம் செய்யப்பட்ட கிராமங்களில் நேரடியாக சென்று பின்தொடர்பணி செய்து வருகிறோம். ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள். 2010ம் ஆண்டில் கர்த்தர் எங்கள் ஊழியப் பாதையில் விசேஷித்த ஆசீர்வாதங்களையும், முன்னேற்றங்களையும் காண கிருபை செய்தார். 2011ம் ஆண்டிலும் கர்த்தருடைய கரம் எங்களோடிருந்து பெரிய காரியங்களை செய்யும்படியாக ஜெபியுங்கள்.

**தேவனுக்கே மகிமை!**


5 / 3A கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவான்சலின்.**
செல்: 98658 26424 போன் : 04652 - 277251


# நன்றி கூறுகிறோம் !

2010 ம் ஆண்டில் டி.வி.ஜி.எம். சிறுவர் இல்லப் பிள்ளைகளை மாதந்தோறும் பொருளுதவியினால் தாங்கி வருபவர்களுக்கும், சிறப்பு விருந்து மற்றும் அவ்வப்போது இனிப்புகள் , நோட்டு, பென்சில்கள், விளையாட்டுப் பொருட்கள் வழங்கி பிள்ளைகளை உற்சாகப்படுத்திய அனைத்து கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் கிறிஸ்மஸ் நாட்களில் ஊழியர்கள், தொழுநோயாளர்கள், விதவைகள், பார்வையற்றோர், சிறுவர் இல்லப் பிள்ளைகளை நினைவுகூர்ந்து விசேஷித்த காணிக்கைகள் மற்றும் அன்பளிப்புகளை அனுப்பிய யாவருக்கும் எங்கள் நன்றியை உள்ளத்தின் ஆழத்திலிருந்து தெரிவித்துக் கொள்கிறோம்.

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

துதியுங்கள்

# 2010 - ல் TVGM மூலம் வல்லமையுடையவர் செய்த மகிமையான காரியங்கள்!

துதியுங்கள்

**கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள் !**
**கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள் !**

## 100–கிராம ஊழியம் / பின் தொடர்பணி



2010 ஜனவரி முதல் டிசம்பர் வரை தமிழ்நாட்டிலுள்ள 13 யூனியன்களில் **100–**கிராம ஊழியம் தடையில்லாமல் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். 1,44,655 சுவிசேஷப் புத்தகங்களும்,1,57000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகளும், 81,000 மற்ற கைப்பிரதிகளும், 1,27,000 சிலுவைக் கொடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. 1,842 புறமத நண்பர்களுக்கு TVGM தலைமை அலுவலகத்திலிருந்து தபால் மூலம் வேதபாடங்கள் அனுப்பப்பட்டு பின்தொடர் பணி நடைபெற்றது.

## ஆலயமில்லாத கிராமங்களில் ஜெபவீடு கட்டுதல்



தமிழ்நாட்டில் மோசூர், பெருவளப்பூர், வடமதுரை, இலுப்பையூரணி, T.கல்லுப்பட்டி, கன்னிவாடி, சானிபூண்டி, பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனி, வைராபுரம் ஆகிய ஆலயமில்லாத 9 கிராமங்களிலும், ஒரிஸாவில் 5 கிராமங்களிலும் ஆக மொத்தம் 14 கிராமங்களில் தேவனுடைய நாம மகிமைக் கென்று ஜெபவீடுகள் கட்டி பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

## கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்



கிறிஸ்தவ தலைமைத்துவ மையத்திற்கு **The Ambassador School of Learning** ( TASOL ) என்ற பெயரை 2010 மார்ச் 1 ம் தேதி தேவனுடைய மகிமைக்காக பிரதிஷ்டை செய்யவும், மார்ச் 17 ம் தேதி TASOL Trust – ஐ பதிவு செய்யவும், அதைத் தொடர்ந்து நிலம் வாங்கவும் கர்த்தர் கிருபை செய்தார். நிலம் வாங்க ரூ. **1** லட்சம் வீதம் **3** பங்காளர்களை கர்த்தர் தந்தார்.

## சிறுவர் இல்லம்



திருச்சி மற்றும் குண்டலில் படித்து வரும் நமது 70 சிறுவர் இல்லப் பிள்ளைகளுடைய தேவைகளையும் கர்த்தர் 2010ம் ஆண்டு முழுவதும் அற்புதமாக சந்தித்துக் கொடுத்தார். திருச்சி ஏலீம் சிறுவர் இல்லத்தின் கட்டிடப் பணி மூன்றிலொரு பகுதியை முடிக்க கர்த்தர் கிருபை செய்தார்.

## தொழுநோயாளர் ஊழியம்



திருச்சி – பஞ்சப்பூர் தொழுநோயாளர்கள் மத்தியில் ஊழியம் செய்யவும், சிலருடைய பழுதடைந்த வீடுகளை கட்டிக் கொடுக்கவும், விசேஷமாக கிறிஸ்மஸ் நாட்களில் பஞ்சப்பூர் மற்றும் புதுக்கோட்டையிள்ள தொழுநோயாளர் களுக்கும் கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் வழங்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

## விதவைகள் / ஏழைகள் ஊழியம்



திருச்சி – சூறாவளிப்பட்டியிலுள்ள விதவைகள் மற்றும் ஏழைகள் மத்தியில் ஞாயிறுதோறும் ஆராதனை நடத்தி நடத்தவும் அவர்களுக்கு அவ்வப்போது உணவுகள் வழங்கவும், விசேஷமாக கிறிஸ்மஸ் அன்பளிப்பு வழங்கவும் கர்த்தர் கிருபை செய்தார். பாஸ்டர் தேவதாஸ் பொறுப்புடன் இதை செய்து வருகிறார்.

## பார்வையற்றோர் ஊழியம்



திருச்சி – ஏர்போர்ட் பகுதியிலுள்ள பார்வையற்றோர் இல்லத்திலுள்ளவர்களுக்கு கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் வழங்க கர்த்தர் கிருபை செய்தார்.

## TVGM தையற்பள்ளி



புதுக்கோட்டை – பில்லுவெட்டுவிடுதி, அண்டக்குளம் கிராமத்தில் நடைபெற்று வரும் தையற்பள்ளியின் மூலம் அநேகர் பயன் பெற்று வருகிறார்கள். 2010ம் ஆண்டில் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**பத்திரிகை ஊழியம்**

2010ம் ஆண்டில் மாதந்தோறும் **"100 – கிராம ஊழியம்"** பத்திரிகை 10,000 பேருக்கும் மற்றும் **"தமிழ் கிராமங்களுக்கு சுவிசேஷம்"** பத்திரிகை 3000 பேருக்கும் தடையில்லாமல் அனுப்ப கர்த்தர் கிருபை செய்தார்.

**அலுவலக கடித ஊழியம்**

2000க்கும் மேற்பட்ட விசுவாசிகள் மற்றும் புறமதநண்பர்கள்தலைமை அலுவலகத்திற்கு ஜெபிப்பதற்காக கடிதம் எழுதியிருந்தார்கள். மேலும் 700 பேருக்கும் அதிகமானோர் தங்கள் பிறந்தநாள், திருமணநாளை எங்களுக்கு தெரியப்படுத்தியிருந்தார்கள். அவர்களுக்கு தலைமை அலுவலகத்திலிருந்து வேதவசனத்தோடு வாழ்த்துக்கடிதம் அனுப்பப்பட்டது.

**தரிசனமுகாம்**

தமிழ்நாட்டில் திருச்சி, புதுக்கோட்டை, கும்பகோணம், அஞ்சுகிராமம் ஆகிய இடங்களில் TVGM **தரிசனம் முகாம்** நடத்த கர்த்தர் கிருபை செய்தார்.

**கலிலேயா முகாம்**

2010 அக்டோபர் 1 , 2 , 3 ஆகிய தினங்களில் திருநெல்வேலி – கோடாவிளையில் **கலிலேயா முகாம்** நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். இதன் மூலம் சுற்றுவட்டாரத்திலுள்ள ஏராளமான மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

*2010ம் ஆண்டு முழுவதும் TVGM மூலம் நிறைவேற்றப்பட்ட ஊழியங்களுக்காக தேவனைத் துதியுங்கள் !*

***ஊழியங்களுக்காக ஜெபித்த, கொடுத்த யாவருக்கும் நன்றி!***
***2011ம் ஆண்டிலும் உங்கள் ஜெபமும் ஆதரவும் தேவை!***
**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**உன் பொருத்தனைகளை செலுத்து,**
**துஷ்டன் இனி உன் வழியாய் கடந்து வருவதில்லை.**
**அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்.** நாகூம் 1 : 15

## TVGM பொருளாதார தேவைகள்

1. 100–கிராம ஊழியம் நடத்த மாதந்தோறும் – ரூ. 50,000
2. யோவான் சுவிசேஷப் புத்தகம் (2லட்சம்) – ரூ. 2,00,000
3. **நடமாடும் ஜெபஊழியம் மாருதி ஆம்னி** – ரூ. 3,00,000
4. சூறாவளிப்பட்டி ஜெபவீடு கட்டுமானப் பணி – ரூ. 2,25,000
5. ஏலீம் சிறுவர் இல்லம் 8 கழிவறை,குளியலறை–ரூ.2,40,000
6. சிறுவர் இல்ல ஒரு பிள்ளைக்கு மாதந்தோறும் –ரூ. 1,000
7. டசால் நிலம் 30 பங்காளரில் இன்னும் 27 பேர் – ரூ.1,00,000

**முக்கியக்குறிப்பு :** குடும்பமாக அல்லது தனிப்பட்ட முறையிலோ அல்லது நண்பர்களாகவோ ஒரு பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** 2011 ஜனவரி முதல் TVGM அலுவலக பொறுப்புகளை எடுத்து, பயிற்சி பெறுகிற சகோ. ஸ்டீபன், சகோதரி பெர்சிஸ்–க்காக தேவனைத் துதியுங்கள். தானியேலுக்குள் இருந்த விசேஷித்த ஞானத்தின் ஆவி இவர்களுக்குள்ளும் காணப்பட ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** சகோ. P.T.கிறிஸ்டோபர், சகோதரி ஜெயசீலி 2010 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஊழியத்தின் காரியங்களையும், அலுவலக ரிக்கார்டுகளையும், அரசாங்கக் கணக்குகளையும் சரிசெய்து கொடுக்க கர்த்தர் விசேஷித்த ஞானத்தின் ஆவியை பரத்திலிருந்து கட்டளையிட ஜெபியுங்கள்.

**புதன் :** நாகர்கோவில் அறிமுகப் பணி அலுவலகத்தை தலைமை தாங்கி நடத்தி வருகிற சகோதரி ஷோபனாவுக்கும், குண்டல் சிறுவர் இல்லத்தை தலைமை தாங்கி நடத்தி வருகிற சகோதரி லீலாவுக்கும் கர்த்தர் விசேஷித்த ஞானத்தின் ஆவியை கட்டளையிட ஜெபியுங்கள்.

**வியாழன் :** கலிலேயா முகாம், மற்றும் குண்டல் சிறுவர் இல்லத்தை மேற்பார்வை செய்து வரும் ரெத்தினம் ஆசிரியர் மற்றும் மனோகர் ஆசிரியர் அவர்களுக்கும் தேவன் விசேஷித்த ஞானத்தின் ஆவியை கட்டளையிடும்படியாக ஜெபியுங்கள்.

**வெள்ளி :** இலங்கை SLVGM ஊழியத்தை நடத்தி வரும் Rev. ஜான் ஐசாயா, சகோதரி டப்னி குடும்பத்தாருக்கும், ஒரிஸா OVGM ஊழியத்தை நடத்தி வரும் பாஸ்டர் சுரேந்திரகுமார் அவர்களுக்கும், தையற்பள்ளியை நடத்தி வரும் பாஸ்டர் ஜான் நேசக்குமாருக்கும், தொழு நோயாளிகள், விதவைகள் ஊழியத்தை கவனித்து வரும் பாஸ்டர் தேவதாஸ்க்கும் தேவன் விசேஷித்த ஞானத்தின் ஆவியை கட்டளையிட ஜெபியுங்கள்.

**சனி :** TVGM மூலம் ஆதாயம் செய்யப்பட்ட ஆத்துமாக்களுக்கும், TVGM க்காக ஜெபிக்கிற, கொடுக்கிற ஒவ்வொருவருக்கும், TVGM தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகத்தில் பணிபுரிகிறவர்களுக்கும், சிறுவர் இல்லத்தில் படிக்கும் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தேவன் விசேஷித்த ஞானத்தின் ஆவியை கட்டளையிட ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** TVGM & TASOL கமிட்டி உறுப்பினர்களுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தின் ஆவியை கட்டளையிடவும், நிறுவனத்தின் மேலதிகாரிகள் ஒவ்வொருவரும் ஞானத்துடன் செயல்படவும் ஜெபியுங்கள்.

## TVGM தலைமை அலுவலக முகவரி

சகல தொடர்புகளுக்கும் :

BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.

"100 - VILLAGE"

SOMARASAMPETTAI,

TRICHY - 620 102.

TAMIL NADU, INDIA.

STD Ph : 0- 431 - 2607241 Email : 100village@tvgm.org

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

1.TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)

2. T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

3. TASOL ( நிலம் வாங்குவதற்கு மற்றும் கல்வி நிதி )

4. T.V.G.M. SOCIAL SERVICE சிறுவர் இல்லம், ஏழை, எளியவர்கள் உதவி ( இதற்கு மட்டும் 80G வரிவிலக்கு உண்டு )

குறிப்பு :Bank A/c No தேவைப்பட்டால் தயவுசெய்து மேற்கண்ட நோக்கத்தை குறிப்பிட்டு எங்களுக்கு ஈமெயில் / தபால் எழுதவும்.

குறிப்பு :Bank To Bank அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கை அனுப்புவதின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**Website : www.tvgm.org**

தினசரி வாக்குத்தத்தம், மாதாந்திர வாக்குத்தத்த செய்தி ,'100 கிராம ஊழியம்' அனுபவ சாட்சிகள், TVGM Documentary, TVGM சிலுவைக்கொடி பாடல்கள், மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

**தவறாமல் பாருங்கள் ! ஜெபியுங்கள் !**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 4011**

**HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி**

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011

**Posting Date 25th at H.P.O. Trichy.**

ஆஸ்திரேலியா **Brisbane** லிருந்து சகோ. பீட்டர் சாமுவேல் / ரேச்சல் குடும்பத்தோடு 19.12.2010 அன்று TVGM-க்கு வந்து அனைவருக்கும் அன்பளிப்புகள், சிறப்பு விருந்து வழங்கி, குடும்பமாக பாடல் பாடி, சாட்சியளித்து **தேவனை மகிமைப்படுத்தினார்கள்.**










**To**

**Return Requested:** TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.